<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

நாள் 06.08.2026
**அசல் வழக்கு எண்.176/2019**
வா.சா. 1. – அஞ்சலி க/பெ.முருகன் என்பவரின் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி
சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்
3) எனது தாத்தா பெயர் என்றால் செங்காணி நாயக்கர். தாவா சொத்துக்கள் அப்பாவு நாயக்கர் சம்பாதித்த சொத்துக்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாத்தா சொத்து என்றுதான் தெரியும். செங்காணி நாயக்கர் அம்மா அப்பா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. செங்காணி நாயக்கருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் கன்னியப்பன், தனம், மல்லிகா. அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் தனம் மற்றும் மல்லிகா இருவரும் இறந்துவிட்டார்கள். கன்னியப்பன் எனது தந்தை அவர் உயிருடன் உள்ளார். தாவா சொத்து சம்மந்தமாக நான் முறைப்படியான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆவணம் கொடுத்துள்ளேன். தாவா சொத்துக்கள் செங்காணி நாயக்கருக்கு மட்டும் சொந்தமானதல்ல என்றும், முருகப்ப நாயக்கர் மற்றும் அவரது மனைவி பட்டம்மாள் ஆகியோர்களுக்கு சொந்தமானது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. செங்காணி நாயக்கர் தாயார் துளசி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. துளசி என்பவரின் சகோதரிதான் பட்டம்மாள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.சா.ஆ.1ன் படியாக 1942ல் முருகப்ப நாயக்கர் துரைசாமி நாயக்கர் வகையறாக்களிடமிருந்து கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன்படியாக சர்வே எண்.2/1 – 1 ஏக்கர் 9 செண்ட் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண். 2/1 சொத்தை பொறுத்து பரிகாரம் கோரி உள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்து நாலாபுறமும் உள்ளது. பி.சா.ஆ.2 படியாக சர்வே

எண்.131 – 2 ஏக்கர் 13 செண்ட் பொன்னுசாமி வகையறாக்களிடமிருந்து முருகப்ப நாயக்கர் கிரையம் வாங்கி உள்ள சொத்து என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த சொத்து அயிட்டம் 1ல் 2 ஆக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.3 ஏழுமலை நாயக்கரிமிருந்து பட்டம்மாள் கிரையம் வாங்கிய ஆவணம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன் சர்வே எண்.131–ல் 12 செண்ட் நிலம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.சா.ஆ.4 பட்டம்மாள் என்பவர் செங்காணி நாயக்கர் மற்றும் நல்லமுத்து நாயக்கர் ஆகியோருக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் முன்னிலைக்கு சர்வே எண்.131ல் 2 ஏக்கர் 55 செண்ட் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.சா.ஆ.5 பட்டம்மாள் என்பவரிடமிருந்து செங்காணி நாயக்கர் கிரையம் பெற்ற ஆவணம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன் சர்வே எண்.2/1ஏ– 1ஏக்கர் 9 செண்ட் இடம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.சா.ஆ.6 இந்திராணி வகையறாவிடமிருந்து செங்காணி நாயக்கர் கிரையம் பெற்ற ஆவணம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.சா.ஆ.7 ஆதி சரண் மேஸ்திரி வகையறாக்களிமிருந்து செங்காணி நாயக்கர் கிரையம் பெற்ற ஆவணம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.சா.ஆ..8 வெங்கடசாமி மேஸ்திரி வகையறாக்களிமிருந்து செங்காணி நாயக்கர் கிரையம் பெற்ற ஆவணம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.சா.ஆ.9 எல்லப்ப நாயக்கர் வகையறாக்களிமிருந்து செங்காணி நாயக்கர் கிரையம் பெற்ற ஆவணம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.சா.ஆ.10 இந்திராணி வகையறாக்களிமிருந்து செங்காணி நாயக்கர் கிரையம் பெற்ற ஆவணம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு

தெரியாது. பி.சா.ஆ.11 படியாக வெண்ணிலா கிரையம் பெற்ற சொத்துக்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4) பி.சா.ஆ.14 எனது தந்தை கன்னியப்பன் மனைவி லஷ்மி அம்மாளுக்கு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தந்தை சண்முகத்திற்கு எழுதிய தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. கலைச்செல்வி, கிருஷ்ணவேனி ஆகியோர்கள் யார் என்றால் எனது அக்கா ஆவார்கள். நான் அப்போது அவர்களுடன்தான் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனது சகோதரர் ஆனந்தனுக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதியது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எதன் அடிப்படையில் சங்கதிகள் சொல்லப்பட்டுள்ளது என்றால் மணிக்காரரிடமிருந்து விவரங்கள் பெறப்பட்டது. மனு செய்து பெற்றேனா என்றால் மனு செய்துதான் பெற்றேன். அந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஆவணங்களை முன்னிலைப்படுத்தி வழக்கை தாக்கல் செய்யாமல் பட்டா அடிப்படையில் தவறான பரிகாரம் கோரி உள்ளேன் என்றால் சரியல்ல. 1949 ம் வருடத்தில் முருகப்ப கவுண்டர் உயில் சாசனம் எழுதி உள்ளார் என்றும், அதன்படியாக ஏ அட்டவணை சொத்து பட்டம்மாளுக்கும், பி அட்டவணை சொத்து செங்காணி நாயக்கருக்கும் ஆண்டு அனுபவித்து கொள்ள வேண்டியது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த உயில்படியாகத்தான் செங்காணி நாயக்கர் பி.சா.ஆ.5ன் படியாக பட்டம்மாளிடமிருந்து சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உயில் ஆவணத்தில் ஆண் வாரிசுகளுக்கு மட்டுமே சொத்துக்களை ஆண்டு அனுபவித்து

கொள்ளவேண்டும் என்றும், பெண் வாரிசுகளுக்கு சொத்துக்கள் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. செங்காணி நாயக்கர் சொத்துக்கள் தவிர அவரது சகோதரர் நல்லமுத்து நாயக்கர் சொத்துக்களை சேர்த்து தவறான பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது திருமணம் எப்போது நடந்தது என்றால் 2008ல் நடந்தது. காதல் திருமணம் ஆகும். எனக்கு சீர் வரிசைகள் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அதனால்தான் சொத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பாகம் கேட்டுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். செங்காணி நாயக்கர் சொத்துக்கள் பேரப்பிள்ளைகளுக்குதான் பாத்தியப்பட்டது என்றும், அதனால்தான் எனது தந்தை சொத்துக்களை பொறுத்து 2, 3 பிரதிவாதிகளுக்கு சொத்துக்களை பி.சா.ஆ.1 மற்றும் 2ன் படியாக எழுதி கொடுத்துள்ளார் என்றும், அதில் எனது உடன்பிறந்த சகோதரிகள் ஒப்புக் கொண்டு சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்று சொன்னால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் தாய் தந்தையரை மதிக்காமல் வீட்டை விட்டு வெளியே சென்று காதல் திருமணம் செய்து கொண்டதால் கூட்டு குடும்ப சொத்தில் பாகம் கோர எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. எங்கள் மூதாதையர் காலத்தில் இருந்து ஆண் வாரிசுகள்தான் சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், அதன்படியாக எனக்கு சொத்துக்களில் பாக உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. தான செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்தபோது சாலவாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் நான் பிரச்சினை செய்தேன் என்றால் சரியல்ல. 2018ம் வருடத்தில் ஆனந்தன் சொத்துக்களை வெண்ணிலாவிற்கு விற்பனை செய்தபோது நான் வெண்ணிலாவிடம் சென்று பிரச்சினை செய்தேன் என்றால் சரியல்ல.

தான செட்டில்மெண்ட் படியாக சொத்துக்கள் வெண்ணிலாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ள நிலையில் அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க்படாததால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, வெண்ணிலா சொத்தினை பார்த்திபன் என்பவருக்கு விற்பனை செய்துள்ளார் என்றும், அவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்பதால் எனது வழக்கு உரிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் மேற்படி ஆவண விவரங்களை எனது அறிவிப்பில் குறிப்பிட்டு சொல்லாமல் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் மேற்படி ஆவண விவரங்கள் சொல்லப்பட்டுள்ளதை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்கள் தவறானது என்றும், அதன்படியாக எனக்கு பாக உரிமை கிடைக்க கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தரப்பில் சொத்துக்கள் விற்கப்பட்ட ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் நான் உரிய தரப்பினரை இவ்வழக்கில் சேர்க்க நடவடிக்கை எடுக்காமல் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்க கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எனது மூதாதையர்கள் அப்பாவு நாயக்கர் மற்றும் முருகப்ப நாயக்கர் சம்பாத்திய சொத்துக்கள் என்றும், அதை மறைத்து எனது தந்தை பெயரில் பட்டா உள்ளதை வைத்து தாவா சொத்துக்களில் எனக்கு 1/6 பாக உரிமை கோரி உள்ளது தவறானது என்று சொன்னால் சரியல்ல. 2015ம் வருடத்தில் தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்டுள்ள நிலையில் 3 வருடம் கழித்து நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தற்போதுதான் ஆவணம் பற்றி தெரியும்.

எனது தந்தை 2015ம் வருடத்தில் பி.சா.ஆ.14 உயில் ஆவணத்தினை எனது தாயார் லஷ்மி அம்மாளுக்கு சொத்துக்களை எழுதி கொடுத்துள்ளது அவரது காலத்திற்கு பின்னர் தன்னுடைய மகள்கள் அனுபவம் செய்து கொள்வதற்காக எழுதப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2015ம் வருடத்தில் உயில் சாசனம் மற்றும் தான செட்டில்மெண்ட் ஏற்பட்ட விவரங்கள் எனக்கு தெரிந்து அதை மறைத்து அனைத்து சொத்திலும் பாகம் பெறவேண்டும் என்பதற்காக பொய்யான சங்கதிகளுடன் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பெற்றோருடன் தற்போது பேசி வருகிறேனா என்றால் அவர்கள் என்னுடன் பேசுவதில்லை. நான் மட்டும்தான் எனது பெற்றோர் பேச்சை கேட்காமல் சொத்தில் பங்கு வேண்டும் என்று அவர்களுக்கு எதிராக வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் செங்காணி நாயக்கர் சொத்துக்களில் பேத்திக்கு உரிமை உள்ளது என்று தவறான சங்கதிகளுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்க கூடியதல்ல என்றால் சரியல்ல. எனது பெற்றோரை கவனிக்காமல் நான் சொத்திற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பாகத்தை கோரிதான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது தாய் தந்தையருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை தவறாக கைப்பற்றவேண்டும் என்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் கோரியுள்ள பாக உரிமை மற்றும் செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியதல்ல என்றும், எனது வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-A.Mohamed Ali,

Additional Subordinate Judge,
Kancheepuram.